# சிலம்பில் முருகன் ஆடல்கள்

14

**முனைவர்.க.திலகவதி**
**தலைவர் - கட்டடக்கலைத்துறை**
**தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613010**

**முன்னுரை :**

பழந்தமிழரின் அகவாழ்க்கையும், புறவாழ்க்கையும் தொல்காப்பியப் பொருளதிகாரம் சிறப்பாகக் குறிப்பிடுகின்றது. தமிழர் வணங்கிய தமிழ்த்தெய்வமாகிய முருகனை (சேயோன்) குறிஞ்சி நிலக் கடவுளாகத் தொல்காப்பியர் சுட்டுவர். பத்துப்பாட்டுள் முதலாவதாக வைத்து எண்ணப்பெறும் திருமுருகாற்றுப்படை இயற்கை எழிலையும், அறுபடை வீடுகளையும், முருகனின் உருவச் சிறப்பையும், முருகனை வழிபட்டுப் பேறுபெற்றோரையும் வியந்து போற்றுகின்றது. 'முருகு' என்னும் சொல்லிற்கு அழகு, இளமை, தெய்வநலம், மணம் என அகராதி பொருள் கூறுகின்றது. 'முருகு' என்னும் பெயரோடு 'அன்' விகுதி சேர்ந்து 'முருகன்' என்னும் திருப்பெயர் அமைந்தது முருகனை,

"சேயோன் மேய மை வரை உலகமும்" எனத் தொல்காப்பியரும்

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு" (திருமுருக.1-2) என நக்கீரரும்

"அறுமுகச் செவ்வேள்; அணிதிகழ் கோயிலும்" (இந்திரவிழவூர் எடுத்த காதை)

"கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்" (ஊர்காண்கதை) எனச் சிலம்பும் பாடியுள்ளமை நோக்கத்தக்கது. முருகன் போரில் வென்று ஆடிய கூத்துக்களையும், மக்கள் முருகனுக்காக ஆடிய கூத்துக்களையும் சிலப்பதிகாரத்தில் வாயிலாக ஆராய்வது இவ்வாய்வின் நோக்கமாகும்.

மனத்தில் உள்ள இன்பங்களைப் பலரும் அறிந்து அனுபவிக்கச் செய்வன கூத்துக்களே, கூத்தினை மக்கள் கண்ணினால் கண்டும், செவியினால் கேட்டும் மகிழ்ச்சி அடைந்தனர் என்பதைக்

"கண்ணினும் செவியினும் நுண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க்கல்லது" (தொல்.மெய்ப்பாட்டியல்)

எனத் தொல்காப்பியம் குறிப்பிடுவதால் அறியலாம். மட்டற்ற மகிழ்ச்சி கூத்தாக வெளிப்படுகின்றது. கூத்துக்களால் தெய்வங்களையும் மகிழச் செய்யலாம் என்பது திண்ணம் தெய்வங்களும் கூத்தாடியதாக இலக்கியங்கள் சுட்டுகின்றன. கூத்திற்கெல்லாம் தோற்றம் தில்லை. சிற்றம்பலத்தில் நடராசர் ஆடியது ஆனந்தக் கூத்தாகும். அவர் குமாராகிய முருகப் பெருமானும் குடைக்கூத்தினையும், துடிக்கூத்தினையும் ஆடியுள்ளார். முருகனுக்கு மகிழ்வூட்டுமாறு மக்களும் குரவைக்கூத்து. வெறிக்கூத்து, வள்ளிக்கூத்து போன்றவற்றை ஆடியுள்ளனர். இதன் சிறப்பைச் சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றுக்காதையும் குன்றக் குரவையும் எடுத்தியம்புகின்றன. சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றுக்காதையும் குன்றக் குரவையும் எடுத்தியம்புகின்றன. சிலப்பதிகாரத்தில் திருமால், சிவன், துர்க்கை, முருகன் முதலான தெய்வங்கள் தம் எதிரிகளான அவுணர், அரக்கர் முதலானவர்களை

அழித்த செய்திகளைப் பாடி ஆடுவதாக இளங்கோவடிகள் பாடியுள்ளார். பதினோராடல்களும் தெய்வங்களின் பெயரால் ஆடப்பட்டதால் ;தெய்வவிருத்தி' என்று கூறப்படும். தெய்வங்கள் தமது பகைவரை வென்று அவ்வெற்றிக் களிப்பில் ஆடிய ஆடல்கள் என்று இவற்றைக் கருதலாம். ஆடல் கலையைப் பயிற்சி பெறுவதற்கும், நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்துக் காட்டுவதற்கும் இப்பதினோராடல்கள் இன்றியமையாத ஒன்றாய் இருந்தது எனலாம், இதனை

"அல்லியம் கொட்டி குடை குடம் பாண்டரங்கம்
மல்லுடன் நின்றாடல் ஆறு
துடிகடையம் பேடு மரக்காலே பாவை
வடிவுடன் வீழ்ந்தாடல் ஐந்து"

என்றும் அடியார்க்குநல்லார் உரை மேற்கொளாலால் அறியலாம்.

முருகன் ஆடிய குடைக்கூத்து

பதினொரு வகை ஆடல்களும் வென்றிக்கூத்து, வசைக்கூத்து, விநோதக்கூத்து என்ற மூன்றனுள் அடங்கும். அவற்றுள் குடைக்கூத்து வென்றிக்கூத்தின் வகையுள் அடங்கும். வென்றிக் கூத்தாவது மாற்றான் ஒழுக்கமும் மன்னன் உயர்ச்சியும் மேம்படக் கூறுவது. போர்களத்தில் அவுணர்கள் அனைவரும் முருகனும் அவன் சேனைத்தலைவர்களும் செய்யும் போருக்கு ஆற்றாமல் தங்கள் கையிலிருந்த படைகளையெல்லாம் போட்டு விட்டுச் சோர்ந்து நின்றார்கள். அதைக் கண்ட முருகனுக்கு வெற்றக் களிப்பு ஏற்பட்டு வீரக்கூத்து ஆடுகின்றான். தன் கையில் உள்ள குடையை ஒருமுகஎழினியாக முன்னே சாய்த்துக் கொண்டு தன் உருவை மறைத்துக் கூத்தாடுகிறார். குடையை சாய்த்து ஆடும் கூத்தாகலின் குடைக்கூத்தாயிற்று குடைக் கூத்திற்கு நான்கு உறுப்பு உண்டு. இதனைச் சிலப்பதிகாரம்.

"படைவீழ்த்தவுணர் பையுள் எய்தக்
குடைவீழ்த் தவர்முன் ஆடிய குடையும்" (சிலப் கடலாடு காதை 6: 52-53) என்றும்

"அறுமுகத்தோன் ஆடல் குடைமற்று அதற்குப்
பெறும் உறுப்பு நான்காம் எனல்" (சிலப் அரங்கேற்று 3:14-15 உரை)

என்றும் சுட்டுவது நோக்கத்தக்கது.

துடிக்கூத்து

துடிக்கூத்தும் முருகன் ஆடிய ஆடலாகும். கடலுள் சூரனை முருகன் போரிட்டு அழித்த கதையே துடியாடலாகும். சூரன் முருகனுடைய போருக்கு ஆற்றாது வஞ்சனையால் மறைந்து சென்று கடல்நடுவில் மாமரமாக நின்றான். அவனுடைய வஞ்சக உருவை அறிந்த முருகன் கடல் கலங்கும் வண்ணம் கடலுக்குள் சென்று வேலினை ஏவி மாமரத்தைத் துண்டாக்கி வெற்றிக் கண்டார். வென்றிச் சிறப்புத் தோன்ற கடலலைகளையே திரையாகக் கொண்டு கடலையே அரங்கமாக்கித் துடிகொட்டி ஆடினார். இக்கூத்து ஐந்து உறுப்புக்களை உடையது இதனை.

"....மாக்கடல் நடுவண்
நீர்த்திரை அரங்கத்து நிகர்த்து முன்னின்ற

சூர்த்திறங் கடந்தோன் ஆடிய துடியும்" (சிலப்.கடலாடு காதை 6:49-51)

"துடியாடல் வேல்முருகன் ஆடல் அதனுக்கு

ஓடியா உறுப்பு ஓர் ஐந்தாம்" (சிலப்.அரங் 3:14-15 உரை)

எனச் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

முருகனுக்கு மக்கள் ஆடிய கூத்து

குரவைக்கூத்து :

மக்கள் முருகன் திருவுள்ளம் மகிழுமாறு மகிழ்ச்சியுடன் குரவைக் கூத்தாடியுள்ளனர். அதனால் வேண்டிய வரங்களை முருகன் அருளுவார் என்னும் நம்பிக்கையும் இருந்தது. குரவையாவது மகளிர் எழுவரேனும், எண்மரேனும், ஒன்பதின்மரேனும் கைகோத்து ஆடும் ஒருவகைக் கூத்து. இக்கூத்தில் குறிஞ்சி நிலத்து மக்களாகிய குறத்தியர்கள் ஆடினார்கள். முருகனை நோக்கிக் குறத்தியர் ஆடிய கூத்து குன்றக்குரவை எனப்படும். தம் சேரிக்கு வரும் நலந்தீங்குகளை முன்னர் அறிவிக்கும். உற்பாதங்களுக்குச் சாந்தியாக ஆடப்பெறுவது என்பர் அடியார்க்குநல்லார். விநோதக் கூத்து ஆறனுள் ஒன்றாகவும் இதனைக் குறிப்பர்.

"குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து …குரவை அயர்" (திரு.முரு.196)

என்றும் சுட்டுகின்றது. குரவைக் கூத்தில் "தலைக்கை தருதல்" ஒரு வழக்கமாகும். துலைவன், ஆடும் மகளிரின் கைகளைப் பற்றித் தழுவுதல் தலைக்கை தருதல் எனப்பட்டது. இதனை முருகாற்றுப்படை

"முழவுறழ் தடக்கையின் இயல ஏந்தி

மென்தோள் பல்பினை தழீஇத் தலைத்தந்து" (முரு.215-216)

எனக் குறிப்பிடுவதால் இக்கூத்தின் சிறப்பை அறியலாம்.

சிலப்பதிகாரத்தில் கோவலனை இழந்த கண்ணகி, அவன் சொற்படி பதினான்காம்நாள் திருச்செங்குன்றில் வேங்கைமர நிழலில் கோவலனோடு வானவூர்தி ஏறினாள். அது கண்ட குறவர்கள் கண்ணகியைக் குலதெய்வமாகக் கருதி மலைவளம் சிறக்கக் குரவையாடினார்கள். அவ்வாறு ஆடும் போது முருகன் மாமரத்தினைத் தடிந்தது. திருச்செந்தில், திருச்செங்கோடு, சுவாமிமலை, ஏரகம் ஆகிய தலத்தின் சிறப்பு, முருகனது பிணிமுகம், வேலின் சிறப்பு ஆறுமுகமும் பன்னிரு கையும் உடைய முருகனது அழகுச்சிறப்பு, கார்த்திகை மகளிர் ஆறுவரின் முலைப்பால் உண்ட நிகழ்ச்சி ஆகிய செய்திகளைக் குன்றக்குரவையில் விரிவாக இளங்கோவடிகள் போற்றியுள்ளார்.

இதனைச் சிலப்பதிகாரம் குன்றக்குரவையில் (தெய்வம்பராஅயது)

"உரவுநீர் மாகொன்ற வேலேந்தி யேத்திக்

குரவை தொடுத்தொன்று பாடுகம்வா தோழி"

ஏரகமும் நீங்கா இறைவன்கை வேலன்றே

பாரிரும் பெளவத்தினுள் புக்குப் பண்டொருநாள்

சூர்மா தடிந்த கடரிலைய வெள்வேலே"

"அணிமுகங்கள் ஓராறும் ஈராறு கையும்

இணையின்றித் தானுடையான் ஏந்திய வேலன்றே

பிணிமுகம் மேற்கொண்டு அவுணர் பீடழியும் வண்ணம்

மணிவிசும்பிற் கோனேத்த மாறுட்ட வெள்வேலே"

"சரவணப் பூம் பள்ளியறைத் தாய்மார் அறுவர்

திருமுலைப்பால் உண்டான் திருக்கை வேலன்றே

வருதிகிரி கோல்அவுணன் மார்பம் பிளந்து

குருகுபெயர்க் குன்றம் கொன்ற நெடுவேலே".... (சிலப்.குன்றக்:24:6-9)

என்று முருகனது வீரம், போர் வெற்றிட, பிறப்பு உருவநலம் போன்ற பல சிறப்புகளை பாடி குரவை அபர்ந்ததைச் சுட்டுகின்றது.

மேலும் கட்டுரைக் காதையில் முருகன் கடல் நடுவே சென்று கிரவுஞ்சம் என்னும் மலையினைப் பிளந்து அவுணரைவென்றதை

"கடல் வயிறு கிழித்து மலைநெஞ்சு பிளந்தாங்கு --

அவுணரைக் கடந்த சுடரிலை நெடுவேல்

நெடுவேள் குன்றம்" (சிலிப்.கட்டுரைகாதை 23:ஜ88-190ஸ எனப் போற்றுகின்றது.

வெறிக்கூத்து

வெறிக்கூத்தாவது தெய்வம் ஏறியாடுகின்ற ஆவேலசக்கூத்து எனப்பொருள்படும். வேலன் கையில் வேலேந்தி, செவ்வாடை உடுத்தி, செவ்வணி அணிந்து, சந்தனம்பூசி, தொண்டகப்பறை ஓலிக்க ஆடுவான். இவன் வேலை ஏந்தி ஆடுதலின் வேலன் என அழைக்கப்படுவான். இது மகளிர்க்கு அணங்கு தீண்டியதனால் செவிலி அல்லது நற்றாய் வேண்டுகோளின்படி ஆடப்பெறுவது இதனைத் தொல்காப்பியம்.

"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்

வெறியாட்டயர்ந்த காந்தளும்" எனவும் (தெல்.புறத்.5)

புறப்பொருள் வெண்பாமாலை

"தான்முருகு மெய்ந்நிறீஇத் தாமம் புறந்திளைப்ப

வேண்முருகற்கு ஆடும் வெறி" ... எனவும்

இதனைத் குறிப்பிடுகின்றது. சிலப்பதிகாரம் குன்றக்குரவையில்

"வெறிகமழ் வைற்பன் நோய் தீர்க்கவரும் வேலன்

வேலன் மடவன் அவனினும் தான் மடவன்

ஆலமர் செல்வன் புதல்வன் வருமாயின்" (சிலப்…குன்றக்-24:12)

… … … …

"வேலனார் வந்து வெறியாடும் வெங்களத்து

நீலப்பறவை மேல் நேரிழை தன்னோடும்

ஆலமர் செல்வன் புதல்வன் வரும்வந்தால்

மால்வரை வெற்பன் மணவணி வேண்டுதுமே"

“குறமகள் அவள் எம் குலமகள் அவளோடும்

அறுமுக ஒருவ நின் அடிப்பினை தொழுதேம்” (சிலப்.குன்றக் 24:14,17)

என்று தோழி அறத்தொடு நிற்றல் துறையில் வள்ளியையும், முருகனையும் வழிபட்ட நிகழ்வை உரைக்கக் காணலாம். மேலும் வெறியாட்டு பற்றிச் சங்க அக இலக்கியங்கள் விளக்கமாகப் பேசுகின்றன. வெறியாடற் செய்திகளை ஐங்குறுநாற்றின் ‘வெறிப்பத்து” பகுதியில் அமைந்துள்ள பத்துப்பாடல்களில் காணலாம். வேறியாடலைக் சிறப்பித்துப் பாடியதால் ஒரு பெண்பாற் புலவர் ‘வெறிபாடிய காமக்கண்ணியார்’ என அழைக்கப்பட்டார்.

வள்ளிக்கூத்து

குறமகள் வள்ளிவேடம் புனைந்து ஆடுகின்ற கூத்தாகலின் வள்ளிக்கூத்து எனப்பட்டது. தொல்காப்பியர் புறத்திணையியலில்

“வாடா வள்ளி வயவரேத்திய ஓடாக்கழல்நிலை” என்பதற்கு இளம்பூரனர் உரை கூறுமிடத்து “வள்ளி என்பது ஒரு கூத்து” என்பர். நச்சினார்க்கினியர் இதனை” அஃது இழிந்தோர் காணும் கூத்து”. இது பெண்பாற்குப் பெருவரவிற்று என்று கூறுவர். இதனால் பெண்களே பெருவழக்காக வள்ளிக் கூத்தை ஆடுதலால், இதனைக் கூத்து இனத்தவர் பெருவிருப்புடன் இருந்து கண்டு களிப்பார் என அறியலாம். அடியார்க்குநல்லார் வள்ளிக்கூத்து பற்றிய ஒரு பழைய வெண்பாவில்

“மண்டமர் அட்ட மறவர் குழாத்திடைக்

கண்ட முருகனும் கண்களித்தான் - பண்டே

குறமகள் வள்ளிதன் கோலங்கொண்டு ஆடப்

பிறமகள் நோற்றாள் பெரிது” (தெல்.புறத்: 5 நச் மேற்கொள்)

என்பதால் முருகனே கண்டு களிக்கும்படி வள்ளியின் கோலம் தாங்கி ஒரு பெண் ஆடுவாள் சாலினி தெய்வமுற்று ஆடிய கோலத்தைக் கொற்றவை. ஐயை, பாய்கலைக்பாவை கோலங்கள் என்று வள்ளிக்கூத்தை வேட்டுவரி சுட்டுகின்றது. அது தவம் செய்து பெற்ற பெறற்கரிய பேறு என்று மக்கள் மத்தியில் நம்பிக்கை நிலவியதை அறியமுடிகிறது.

இவற்றால் முருகன் அவுணர்களைப் போரில் வென்று ஆடிய குடைக்கூத்தினையும் சூரனைப் போரிட்டு வென்று ஆடிய துடியாடலையும் சிலப்பதிகாரத்தின் வாயிலாக அறிய முடிகின்றது.

முருகனுக்காக மக்கள் ஆடிய குரவை, வெறியாடல், வள்ளிக் கூத்தின் சிறப்பையும் உணரமுடிகிறது.

இசையும், கூத்தும், பாட்டும் மக்களை மகிழ்விப்பதோடு, ஒற்றுமை, இணக்கம், நட்புறவினையும் ஏற்படுத்துகின்றது. இறைவனின் அருள், அன்பு வேண்டிடல் நிகழ்த்தப்பட்டுள்ளது.

**துணைசெய்த நூல்கள்**

வேங்கடசாமி நாட்டார், க.மு. - சிலப்பதிகாரம், ஐச.சி.நு.ப. கழக வெளியீடு, சென்னை – 1999

சுப்பிரமணியன், ச.வே - அடியார்க்கு நல்லார் உரைத்திறன்,மெய்யப்பன் பதிப்பகம்

வரதராஜன் கனி, வெ.மு - அரங்கேற்றுக்காதை ஆராய்ச்சி உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை, 2009.